சென்னைப் பெருநகர திட்டப்பகுதியில் அனுமதியில்லா கட்டிடங்களின் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்போர் மீது இடிமானம் உள்ளிட்ட அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதிலிருந்து ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசு ஒரு அவசரச் சட்டத்தை பிறப்பித்துள்ளது.

2. இந்த அவசரச் சட்டம் கீழ்க்காணும் வகையிலான அனுமதியில்லா கட்டிடங்களுக்கு இதுகாறும் உள்ள நிலைமையைப் பேணுதலை வலியுறுத்துகிறது.

அ) நடைமுறையிலுள்ள முழுமைத் திட்டம், விரிவான வளர்ச்சித் திட்டம் மற்றும் திட்ட அனுமதிக்கு இணங்காத நில உபயோகம்

(ஆ) திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதிக்குப் புறம்பான அல்லது அப்பாற்பட்ட

கட்டிடங்கள் மற்றும்

(இ) திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி பெறப்படாத கட்டிடங்கள்

3. இவ்வாறாக அனுமதியில்லாத மற்றும் அனுமதிக்குப் புறம்பாக எந்த ஒரு நபராலும் மேற்கொள்ளப்பட்ட கட்டிடங்கள் குறித்து அந்நபர் கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு 31.08.2007க்குள் தகவல் தெரிவிக்குமாறும், தவறும் பட்சத்தில் பின்னர் வளர்ச்சித் திட்ட விதி, ஒழுங்குமுறை விதிகள் துணை விதிகளுக்கு கட்டிடம் மாறுபட்டு இருப்பதை கண்டுபிடிக்க நேர்ந்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | வளர்ச்சியின் வகைப்பாடு | பதிவாக்க அலுவலர் |
|---|---|---|
| 1. | சென்னைப் பெருநகர் எல்லைக்குட்பட்ட பலமாடி கட்டிடங்கள், சிறப்புக் கட்டிடங்கள் மற்றும் தொகுப்புக் கட்டிடங்கள் | தலைமை திட்ட அமைப்பாளர் (செயலாக்கம்)<br><br>சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| 2. | பலமாடிக் கட்டிடங்கள், சிறப்புக் கட்டிடங்கள் மற்றும் தொகுப்புக் கட்டிடங்கள் அல்லாத இதர கட்டிடங்கள் | |
| | அ) சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட கட்டிடங்கள் | ஆணையர்,<br><br>சென்னை மாநகராட்சி |
| | ஆ) நகராட்சி எல்லைக்குட்பட்ட கட்டிடங்கள் | சம்பந்தப்பட்ட நகராட்சி<br><br>ஆணையர் |
| | இ) பேரூராட்சிக்குட்பட்ட கட்டிடங்கள் | பேரூராட்சியின் செயல் அலுவலர் |
| | ஈ) ஊராட்சிக்குட்பட்ட கட்டிடங்கள் | சம்பந்தப்பட்ட ஊராட்சி<br><br>ஒன்றியத்தின் ஆணையர் |

4. இத்தகவல்கள் கட்டிடத்தின் அனைத்துப் பகுதியிலிருந்து வெவ்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட பல்வேறு நிழற்பட நகல்களுடன் இணைத்து கீழ்க்காணும் படிவத்தில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

<u>“தமிழ் நாடு அவசரச் சட்டம் 1, 2007ன் கீழ் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்படவேண்டிய படிவம்</u>

(i) பெயர்

(ii) முகவரி

(iii) சொத்தின் வகைப்பாடு

(நிலம் / கட்டிடம்)

(iv) சொத்து அமையப்பெற்ற இடத்தின் முகவரி

(v) அனுமதியில்லா / அனுமதிக்கு புறம்பான கட்டிடத்தின் தன்மை

(vi) திட்ட அனுமதி எண் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட நாள்

(vii) அனுமதியில்லாத / அனுமதிக்கு மாறுபட்ட கட்டிடத்தின் 27.7.2007 அன்றைய நிலை

(viii) இணைக்கப்பட்ட நிழற்படங்களின் எண்ணிக்கை

<u>உறுதிமொழி</u>

மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் நான் அறிந்தவரையில் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

**மனுதாரரின் கையொப்பம்**

நாள் : “